ஆட்சியிலும் சரி, எங்களுடைய ஆட்சியிலும் சரி போக்குவரத்துக் கழகங்கள் எப்பொழுதுமே நிதி நெருக்கடியில் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. அவ்வப்பொழுது, அந்தந்தத் தேவைக்கேற்ப, அரசு நிதிகளைக் கொடுத்து, போக்குவரத்துக் கழகத்தினுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைத்துக் கொண்டிருக்கிறது. எனவே, நிறுத்தப்பட்ட வழித்தடங்களிலே frequency ஆக இரண்டு நிமிடங்களுக்கு ஒரு பேருந்து இயக்கிக் கொண்டிருக்கின்ற வழித்தடங்களையெல்லாம் மறு ஆய்வு செய்து, அப்படிப்பட்ட பேருந்துகள் மட்டும்தான் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பார்க்கலாம். நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு, என்ன என்பதை கேட்டு முடிவு சொல்கிறேன். (குறுக்கீடு) கேட்கிறேன், கேட்கிறேன். (குறுக்கீடு) கேட்டு சொல்கிறேன்.*

3. விதி 110-ன்கீழ் அறிக்கைகள்

(அ) கூவம், அடையாறு மற்றும் பக்கிங்காம் கால்வாய்களில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல், கழிவுநீரை சுத்திகரித்து மறுசுழற்சி செய்தல் உள்ளிட்ட நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

2019 ஜூலை 11]

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை.*

1. சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளைமூலம் அடையாறு மற்றும் கூவம் நதிகளுக்கான சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய் மற்றும் இதனைச் சேர்ந்த பிரதான நீரோடைகளில் கழிவுநீர் கலப்பதை இடைமறித்தல், மாற்று வழிகளை அமைத்தல், இடத்திற்கு ஏற்ப ஆங்காங்கே கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல், கழிவுநீர் உந்து நிலையங்கள் அமைத்தல், மற்றும் தற்பொழுதுள்ள சென்னை கழிவுநீர் உட்கட்டமைப்புகளைப் புதுப்பித்தல், வலுப்படுத்துதல் போன்ற பணிகளைச் செயல்படுத்த, சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, 2019 முதல் 2023 வரையிலான காலக்கட்டத்தில் செயல்படுத்தும் இத்திட்டத்திற்கு சுமார் 2,371 கோடி ரூபாய் செலவாகும் என திட்டமிடப்பட்டு, இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2. விரைவான நகரமயமாதல், தொழில்மயமாக்கல் போன்ற காரணங்களால், தமிழ்நாட்டில் குடிநீர்த் தேவை தொடர்ந்து அதிகரித்துவரும் அதே வேளையில், பருவநிலை மாற்றம் உள்ளிட்ட பல காரணங்களால் தொடர்ச்சியாக பருவமழை பொய்த்து, நீர் வளம் குறைந்து வருகிறது. இந்த நிலையை சிறப்பாக எதிர்கொள்வதோடு மட்டுமல்லாமல், நீர்நிலைகள் மாசுபடுவதைத் தவிர்ப்பது, தொழிற்சாலை மற்றும் இதர பயன்பாடுகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட நீரை உபயோகிப்பது, கழிவுநீர் மறு உபயோகக் குழாய் கட்டமைப்பை (Grid) தெரிவு செய்வது உள்ளிட்ட வழிமுறைகளைக் கொண்ட ஒருங்கிணைந்த கொள்கையை மாண்புமிகு அம்மாவின் அரசு உருவாக்கும்.

3. மாண்புமிகு அம்மா அவர்களின் தொலைநோக்குத் திட்டம் 2023-ல், கழிவுநீரினை சுத்திகரிப்பு செய்து, மறுசுழற்சி செய்வது ஒரு அங்கமாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதனை நடைமுறைப்படுத்தி,

நிலத்தடி நீர் மட்டத்தை பெருக்கிடவும், நீர் வழங்கல் ஆதாரங்களை அதிகரிப்பதற்கு நிரந்தர மற்றும் நிலையான தீர்வுகளைக் கண்டறிவதற்கும், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் 260 மில்லியன் லிட்டர் கழிவுநீரை மூன்றாம் நிலை சுத்திகரிப்பின்மூலம் சுத்திகரித்து, மறுபயன்பாட்டிற்காக சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள நீர்நிலைகளில் விடுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. அதேபோன்று, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிகளில் உள்ள நீர்நிலைகளில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்க, சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவுநீரினை மறுசுழற்சி செய்து தொழிற்சாலைகள் மற்றும் நிலத்தடி நீர் செறிவூட்டுதல் போன்ற பல்வேறு பயன்பாடுகளுக்கு உபயோகிக்கும் சாத்தியக்கூறுகளைக் கண்டறிய உரிய ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. கோயம்புத்தூர் மாநகராட்சி, தமிழ்நாட்டில் இரண்டாவது பெரிய மாநகராட்சியாகும். இங்கு நாளுக்குநாள் அதிகரித்துவரும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும்பொருட்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் கோயம்புத்தூரில் ஓர் ஒருங்கிணைந்த நவீன பேருந்து நிலையம் அமைக்கப்படும் என அறிவித்திருந்தார்கள். அதனடிப்படையில், வெள்ளலூரில் 61.62 ஏக்கர் பரப்பளவில், 178.26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசு மானியம் மற்றும் உள்கட்டமைப்பு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெற்று, நடப்பு நிதியாண்டில் இப்பேருந்து நிலையம் செயலாக்கத்திற்கு கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) அங்கன்வாடி மையக் குழந்தைகளுக்கு இரண்டு இணை இலவச வண்ணச் சீருடை வழங்குதல், 6 அரசு கூர்நோக்கு இல்லங்களை 16 மாவட்ட இளைஞர் நீதிக் குழுமங்களுடன் காணொலி காட்சிமூலம் இணைத்தல் தொடர்பான சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,